கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ஓ.மு.எண்.1720/அ1/2025, நாள். .04.2025

பொருள்: பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை– கள்ளக்குறிச்சி மாவட்டம் –உளுந்தூர்பேட்டை, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி.பா.சிவப்பிரியா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் –சார்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக்கல்வித்துறை நாள்.09.09.2022
2. கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 06747/அ1/2023, நாள்–27.09.2023
3. உளுந்தூர்பேட்டை, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் கடிதம், ந.க.எண்.47/2025 நாள்.27.02.2025

*****

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி.பா.சிவப்பிரியா என்பார் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, உளுந்தூர்பேட்டை, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக 29.09.2023 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். அன்னாருக்கு பார்வை 2–ல் கண்டவாறு கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரால் நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளதால், அன்னார் பணியேற்ற நாளான 29.09.2023 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் இவருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலத்தை தகுதிகாண் பருவகாலமாக முடிக்கப்பட வேண்டுமெனவும் தகுதிகாண்பருவ காலத்தில் முடிக்கப்பட வேண்டிய துறைத்தேர்வுகள் மற்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி தேர்ச்சி பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. தகுதிகாண்பருவம் முடித்து ஆணை வழங்கப்பட்ட பின்னர்தான் இரண்டாவது ஊதிய உயர்வு வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner

பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவுகளை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்படுவதுடன் அன்னாரது பணிப்பதிவேடு அசல் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு– அசல் பணிப்பதிவேடு – 1 தொகுப்பு.

முதன்மைக்கல்வி அலுவலர்
கள்ளக்குறிச்சி

பெறுநர்– திருமதி.பா.சிவப்பிரியா,
இளநிலை உதவியாளர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
உளுந்தூர்பேட்டை,
கள்ளக்குறிச்சி மாவட்டம். (உரிய வழியாக)

நகல்– தலைமை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
உளுந்தூர்பேட்டை,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

ந.க. எண்.47/2025 நாள் -04-2025
உரிய ஆணை, சம்பந்தப்பட்டவருக்கு

தலைமை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
உளுந்தூர்பேட்டை - 606 107,
கள்ளக்குறிச்சி மாவட்டம்

Scanned with OKEN Scanner